# டிரஸ்ட் (நம்பக) ஆவணம்

20____ வருடம் __________ மாதம் ____ தேதி __________ மாவட்டம், __________ தாலுக்கா, __________ கிராமம், கதவு எண்.______ல் வசிக்கும் திரு.__________ அவர்கள் குமாரர் சுமார் ___ வயதுள்ள திரு.__________ ஆகிய நான் எழுதி வைத்த அறக்கட்டளைப் பத்திரம் (தொழில் வியாபாரம்)

**(1). டிரஸ்டின் பெயர் -**

**(2). பதிவு அலுவலகம் -**

**(3). டிரஸ்டின் நோக்கங்கள் -**

(அ). நலிந்து கொண்டிருக்கும் நாட்டுப்புறக் கலைகளை மறு ஆய்வு செய்து மக்கள் நல்வாழ்வு பெறும் வகையில் அரசு திட்டங்கள் மூலம் பயன்பெறச் செய்வது.

(ஆ). _______ சமூதாய மக்களின் வாழ்வு உரிமைகளுக்காக கலைவழி மூலம் கொண்டு செல்வது.

(இ). வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக கலைவழி மூல உணரச் செய்தல்

(ஈ). தமிழ்நாடு முழுவதிலுமுள்ள வீதி நாடகக் கலைஞர்களை ஒருங்கிணைத்து அவர்கள் மூலம் கிராமம் கிராமமாக அரசின் நலத் திட்டங்கள் குறித்து விழிப்புணர்ச்சியடைச் செய்தல்.

(உ). தொண்டு நிறுவனங்கள், தன்னார்வு அமைப்புகள், பொதுநல அமைப்புகள், சுய உதவிக் குழுக்கள் ஆகியவற்றிற்கு தலைமைப் பண்பு, ஆளுமைத் திறன், தொடர்புத் திறன், மனிதவள மேம்பாடு, வேலைவாய்ப்பு, பெறுவதற்கான திறன் வளர்த்தல் போன்றவற்றிற்கு தேவையான பயிற்சி அளிக்கும் பயிற்சிமையமாக செயல்படுவது.

Verified RealEstate™

(ஊ). தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு ஒன்றியத்திலும் அரசினரால் வழங்கப்படும் சலுகைகளை எடுத்துச் செல்லும் கலைக்குழுவை உருவாக்குவது.

(எ). மனிதனை அச்சுறுத்தும் கொடூர நோய்கள் குறித்த விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.

(ஏ). மக்கள் உடல் நலம் சார்ந்த ஆவணப்படங்கள், குறும்படங்கள் ஆகியவற்றை மிகமிக குறைந்த செலவில் தயாரிப்பது.

(ஐ). அரசு விழாக்களில் கிராமப் புறக்கலைஞர்களை பயன்படுத்த முயற்சி எடுப்பது கலைநிகழ்ச்சிகள் நடத்துதல்.

(ஒ). மேலே கண்ட நோக்கங்களை நிறைவேற தனியாரிடமிருந்தோ தொண்டுள்ளம் கொண்டவர்களிடமிருந்தோ, கம்பெனிகள், நிறுவனங்கள் போன்றவற்றிடமிருந்து பொருட்களாகவோ, அசையும் அல்லது அசையாச் சொத்துக்களாகவோ ஆர்ஜிதம் செய்தல்.

மேலே கண்ட நோக்கங்கள் நிறைவேற மேலும் தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளுதல்.

**(4). டிரஸ்டின் ஐவேஜுகள்**

இந்த டிரஸ்டிக்கு ஆரம்ப மூலதனமாக ரூ. __________ (ரூபாய்__________மட்டும்) கொடுத்து நான் இந்த டிரஸ்டை ஏற்படுத்தியுள்ளேன். இந்த டிரஸ்டிற்கு மேற்சொன்ன ரூ. __________ (ரூபாய்__________ மட்டும்) தவிர வேறு எந்தவிதமான ஆஸ்தியும் கிடையாது.

மேலும் அவ்வப்போது இனிமேல் வாங்கும் சொத்துக்களும், பொருட்களும், நன்கொடைகளுமாகவோ மற்ற விதமாகவோ வசூலாகும் தொகைகள் அவைகளின் விருத்தியம்சங்களும் இந்த டிரஸ்டின் ஐவேஜூகளாகும்.

**(5). டிரஸ்டு போர்டு**

இந்த டிரஸ்டி அதன் தர்ம காரியங்களையும் நிர்வகிக்க கீழ்கண்ட ____ நபர்களை இந்த டிரஸ்டின் நிர்வாக டிரஸ்டிகளாக நியமித்துள்ளேன்.

Verified @ RealEstate

(1). ________________________ ஸ்தாபகர் மற்றும் தலைவர் டிரஸ்டி

(2). ________________________ செயலாளர் டிரஸ்டி

(3). ________________________ பொருளாளர் டிரஸ்டி

(4). ________________________ டிரஸ்டி

(5). ________________________ டிரஸ்டி ........

**(6). டிரஸ்டின் நிர்வாகம்**

இந்த டிரஸ்டையும் அதன் தர்ம காரியங்களையும் அதன் சொத்துக்களையும் மேற்கண்ட _____ டிரஸ்டிகள் அடங்கிய ஒரு டிரஸ்டு போர்டு நிர்வாகம் செய்து வரவேண்டும். மேற்படி டிரஸ்டிகள் அவர்கள் ஆயுட் காலம் வரை பதவி வகிப்பார்கள். டிரடிகள் எவருடையஸ்தானமும் இடைக்காலத்தில் காலியானால் மீதி டிரஸ்டிகள் சோர்ந்த இந்த டிரஸ்டின் நோக்கங்களில் ஈடுபாடும் விருப்பமும் கொண்ட வரை டிரஸ்டியாக நியமித்துக் கொள்ளலாம். எந்த டிரஸ்டியின் ஸ்தானமும் காலியாக இருந்தாலும் இதைப் பூர்த்தி செய்யாத காரணத்தால் மற்ற டிரஸ்டிகள் செய்யும் எக்காரியமும் அல்லது நடவடிக்கையும் செல்லாது என்று கோரத்தக்கதல்ல. டிரஸ்டு போர்ட்டு ____ மாதங்களுக்கு ஒரு முறை தவறாது கூட வேண்டும். தேவையானால் இடைக்காலத்திலும் கூடலாம். செயலாளர் டிரஸ்டி தலைவரைக் கலந்து ஆலோசித்து கூட்டம் நடக்கும் தேதியையும், பொருளடக்கத்தையும் ஒரு வாரம் முன்னதாக மற்ற டிரஸ்டிகளுக்கு அறிவிக்க வேண்டும். அவசர காரியங்களுக்கு சுற்றறிக்கை வாயிலாகவும் தீர்மானங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். டிரஸ்டு போர்டு கூட்டத்திற்கு தலைவர் டிரஸ்டி தலைமை வகிப்பார். தலைவர் டிரஸ்டி ஆஜரில் இல்லாத போது யாராவது ஒரு டிரஸ்டி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர் தலைமை வகிப்பார். தீர்மானங்கள் ஏகமனதாக இருக்கலாம். அல்லது மெஜாரிட்டி ஓட்டின் மூலம் நிறைவேற்றலாம். சமவாக்குகள் இருந்தால் தலைவர் டிரஸ்டியின் காஸ்டிங் வோட்டு மூலம் முடிவு செய்யப்படும்.

Verified @ RealEstate ™

டிரஸ்டிகளில் எவரேனும் டிரஸ்டு நோக்கங்களுக்கு விரோதமாகவும், இடையூராகவும் செயல்பட்டால் டிரஸ்டு போர்டு கூடி மெஜாரிட்டிகளின் தீர்மானம் மூலம் அவரை நீக்கலாம்.

டிரஸ்டு நிர்வாகத்திற்கு வேண்டிய விதிகளையும், நடைமுறைகளையும் டிரஸ்டு போர்டு இயற்றிக் கொள்ளலாம். டிரஸ்டின் வரவு செலவுகளுக்கு சரியான கணக்குகள் பேணப்பட வேண்டும். ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் மாதம் 30ம் தேதிக்குள் டிரஸ்டின் வருடாந்திரக் கூட்டம் நடைபெற வேண்டும். டிரஸ்டு போர்டு கணக்குகள் ஒவ்வொரு ஆண்டும் _____ மாதம் _____ம் தேதி முதல் மறு ஆண்டு மார்ச் ___ம் தேதி வரை உள்ளதாகும். மேற்படி வருடாந்திரக் கூட்டத்தில் முந்திய ஆண்டு கணக்கு வரவு செலவுகள், பட்ஜெட் முதலானவற்றை தணிக்கையாளரால் சார்ட்டர்டு, அக்களெண்டென்ட்டால் தணிக்கை செய்யப் பெற்றதை பரிசிலிக்கப் பெற்று டிரஸ்டு போர்டு அங்கீகரிக்க வேண்டும். இதற்காக ஒரு தணிக்கையாளரை (சார்ட்டர்டு அக்கௌண்டென்ட்) டிரஸ்டு போர்டு நியமித்துக் கொள்ள வேண்டும்.

**7. டிரஸ்டு போர்டின் இதர அதிகாரங்கள்:-**

டிரஸ்டின் சார்பில் சொத்துக்களையும், பணங்களையும், தர்ம காரியங்களையும் நிர்வகித்து வருதல், அன்றாட வரவு செலவுகள், கடிதப் போக்குவரத்து சிப்பந்திகள் நியமிப்பது. விலக்குவது, டிரஸ்டிற்காக சொத்துக்களை வாங்குவது கட்டிடம் கட்டுதல், தஸ்தாவேஜூகளை கையெழுத்துச் செய்வது நன்கொடைகள் வசூலிப்பது தர்ம காரியங்களுக்கு செலவிடுவது, கணக்க வைத்துக் கொள்வது டிரஸ்டுபோர்டு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்து, கோர்ட்டுகள் அரசாங்க அலுவலகங்கள், பப்ளிக் ஆபிசுகளில் முதலானவைகளில் டிரஸ்டின் சார்பில் ஆஜராகி சகல நடவடிக்கைகளையும் நடத்துவது. அவற்றையும் மற்றும் பொதுவாக டிரஸ்டு போர்டு கூட்டத்தில் தீர்மானிக்கிறபடி செய்ய வேண்டியவைளையும் டிரஸ்டு போர்டிலுள்ள தலைவர் டிரஸ்டி, செயலாளர் டிரஸ்டி, பொருளாளர் டிரஸ்டி மூவரும் சேர்ந்து டிரஸ்டு போர்டின் தீர்மானத்திற்கு உட்பட்டு செயல்பட வேண்டியது.

**தலைவர் டிரஸ்டி**

டிரஸ்டு போர்டு கூட்டங்களுக்கு தலைமை வகிப்பது மற்றும் டிரஸ்டு நோக்கங்களை நிறைவேற தேவையான ஆலோசலைகளை டிரஸ்டு போர்டுக்கு அளிப்பது.

**செயலாளர் டிரஸ்டி**

டிரஸ்டின் காரியங்கள் அனைத்தும், டிரஸ்டு போர்டு கூட்டங்களையும் கூட்டவும், கடிதப் போக்குவரத்து செய்யவும் ஆண்டு அறிக்கை தயாரிக்கவும், நிகழ்ச்சிக் குறிப்புப் புத்தகம் மினிட் புத்தங்கள், தஸ்தாவேஜுகள் இதர சாமான்களை தனது பொறுப்பில் வைத்திருக்கவும் நிர்வாகக் கமிட்டியின் அனுமதியின் பேரில் செலவு செய்யவும், அவசர காரியங்களை நிறைவேற்றும் பொருட்டு சுற்றறிக்கை அனுப்பவும் செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

**பொருளாளர் டிரஸ்டி**

டிரஸ்டிற்கு வரவேண்டிய நன்கொடைகள், மற்றும் தெகைகளை வசூலித்து டிரஸ்டின் கணக்கில் வங்கியில் செலுத்துவது டிரஸ்டின் அவசர செலவுகளுக்கு ரூ__________ வரை கையில் ரொக்கமாக வைத்துக்கொள்ளலாம்.

டிரஸ்டின் நோக்கங்களை நிறைவேற்ற தனியாரிடமோ மற்றும் கம்பெனிகள் நிறுவனங்கள் ஆகியவற்றிடமிருந்தோ பொருளாகவோ, அல்லது பணமாகவோ அசையும் அல்லது அசையாச் சொத்துக்களாகவோ நன்கொடைகள் பெறுவது மற்றும் அரசுகளிடமிருந்து கிராண்டுகள் மானியங்கள் பெறுவது

டிரஸ்டு போர்டு டிரஸ்டு சொத்துக்களில் வருமானம் பெறுக்குவதற்கு கட்டிடம் கட்டுதல் மற்றும் டிரஸ்டு நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு பணம் தேவையிருந்தால் தனியாரிடமோ அல்லது வங்கிகளிடமோ கடன் பெறலாம்.

**8. வங்கி கணக்கு**

Verified RealEstate™

டிரஸ்டின் பெயரால் அரசுடமையாக்கப்பட்ட வங்கிகளிலோ அல்லது ஷெடியூல்டு வங்கிகளிலோ கணக்குத் திறக்கவும், தொகைகள் டெபாசிட் செய்யவும், திரும்பப் பெறுதலும், செக்குகள், டிராப்டுகள் முதலான கைமாற்றிச் செல்லத்தக்க ஆதரவுகளில் தலைவர் டிரஸ்டி, செயலாளர் டிரஸ்டி, பொருளாளர் டிரஸ்டி ஆகிய மூவரில் யாரேனும் இருவர் சேர்ந்து கையெழுத்துச் செய்து தொகைகள் வாங்கவும், வங்கி சம்மந்தப்பட்ட சகல காரியங்களும் செய்து வரவேண்டியது. அவசர காரியங்களுக்கு ரூ__________ வரையில் வங்கிக் கணககலிருந்து பற்ற வழி செய்து கையிருப்பில் ரொக்கமாக வைத்துக் கொள்ளலாம். அதற்கு மேல் கையிருப்பில் வைத்துக்கு கொள்ள டிரஸ்டு போர்டு அங்கீகாரம் பெற்று வைத்துக் கொள்ளலாம். டிரஸ்டின் செலவுகள் செய்யும் பொழுது ரூ__________ வரை தலைவர் டிரஸ்டி, செயலாளர் டிரஸ்டி, பொருளாளர் டிரஸ்டி ஆகியவர்கள் செலவு செய்து டிரஸ்டு போர்டு ஒப்புதலைப் பெற வேண்டும். ரூ__________க்கு மேற்பட்ட செயலானால் டிரஸ்டு போர்டின் முன் அனுமதி பெற்று செலவிடப்பட வேண்டும்.

(9). டிரஸ்டின் நிதிகள் டிரஸ்டின் நோக்கங்களுக்காக மட்டுமே செலவிடப்பட வேண்டும்.

(10). டிரஸ்டின் நிதியிலிருந்து டிரஸ்டிகள் எவரும் சம்பளமாகவோ போனஸ், இனாம் போன்று வந்தவிதத்திலும் பிரித்துக் கொள்ளத தக்கதல்ல. டிரஸ்டிகளுக்கு போக்குவரத்து செலவுகளுக்கு டிரஸ்டு போர்டு தீர்மானிக்கிறபடி நியாயமான போக்குவரத்துச் செலவு அனுமதிக்கப்படும்.

(11). டிரஸ்டின் சொத்துக்கள் யாவும், டிரஸ்டின் பெயரிலேயே இருக்க வேண்டும். சொத்துக்கள் சம்மந்தமாக தஸ்தாவேஜுகள் எழுதிக் கொடுக்க வேண்டியலிருந்தால் தலைவர் டிரஸ்டி, செயலாளர் டிரஸ்டி ஆகிய இருவரும் எழுதிக் கொடுக்க வேண்டும்.

(12). டிரஸ்டின் நிதிகள் 1961ம் வருடத்திய இந்திய வருமான வரிச் சட்டம் பிரிவு 13-1டி மற்றும் 11(5)ன்படி முதலீடு செய்யப்பட வேண்டும்.

(13). டிரஸ்டின் நோக்கங்களில் மாறுதல் செய்ய வேண்டியதிருந்தால் வருமானவரி ஆணையரின் முன் அனுமதி பெற்று செய்ய வேண்டும்.

Verified RealEstate™

(14). இந்த டிரஸ்டு இலாப நோக்கமின்றி அறப்பணிகளை செய்து வரும்.

(15). இந்த அறக்கட்டளையை நடத்த இயலாது போனால் டிரஸ்டின் ஆஸ்திகளை இது போன்ற கொள்கைகளை உடைய வேறு ஒரு பதிவு செய்யப்பட்ட டிரஸ்டுக்கு ஒப்படைக்க வேண்டும்.

(16). இந்த அறக்கட்டளை இரத்துச் செய்யத்தக்கதல்ல

(17). இந்த டிரஸ்டின் பயன்கள் யாவும், ஜாதி, இன மொழி வேறுபாடின்றி அனைத்துப் பிரிவு மக்களின் நம்மைக்காக பயன்படுத்தப்பட வேண்டும்.

(18). இந்த டிரஸ்டின் செயல்பாடுகள் அனைத்தும் இந்தியாவிலேயே செயல்படுத்தப்படும்.

இந்த டிரஸ்டுக்கு இதில் காட்டப்பெறாத விசயங்களுக்கு இந்தியன் டிரஸ்ட் ஆக்ட் விதிகள் பொருந்தும்.

இந்தப்படிக்கு நான் கீழ்கண்ட சாட்சிகளின் முன்னிலையில் மனப்பூர்வமாக சம்மதித்து எழுதி வைக்கும் டிரஸ்ட்டு ஆவணம்.

சாட்சிகள்

1.

2

Verified RealEstate ™